**14.06.2024 அ.வ.எண்.370/1998 வா.சா.1, கண்ணப்ப பண்டிதர் த/பெ. மாணிக்கம்**

**குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கை வீட்டு மனைக்காக தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என கேட்டால் வீட்டு மனைக்காக தாக்கல் செய்துள்ளேன். என் தந்தைக்கு இரண்டு மனைவிகள் முதல் மனைவி பச்சையம்மாள் இறந்த பிறகு எனது தாயார் முனியம்மாளை திருமணம் செய்து கொண்டார். பச்சையம்மாளுக்கு பிறந்தவர்கள் மொத்தம் மூன்று நபர்கள். என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் ஐந்து நபர்கள். அவர்கள் நான் மற்றும் சுப்பிரமணி மற்றும் செல்வராஜ் மற்றும் செல்வி மற்றும் கிருஷ்ணவேணி ஆகியோர் ஆகும். பச்சையம்மாள் எப்போது இறந்தார் என கேட்டால் அது விவரம் தெரியவில்லை. பச்சையம்மாளின் வாரிசு சான்றை தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தை பச்சையம்மாள் ஒரு பெட்டி நாயுடு என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார். வழக்கு சொத்தில் பச்சையம்மாளின் பிள்ளைகளுக்கும் பாகம் உண்டு என்பது சரிதான். ஏன் அவர்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் இறந்துவிட்டார்கள். இறந்த நபர்களின் வாரிசுகளை வழக்கில் சேர்க்கவில்லை. அவர்களை ஏன் சேர்க்கவில்லை என கேட்டால் அவர்கள் வேண்டாம் என்று போய்விட்டார்கள். பச்சையம்மாளின் வாரிசுகள் வழக்கு சொத்தை எனக்கு ஆவணம் மூலம் எழுதிக்கொடுக்கவில்லை. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என கேட்டால் ஞாபகமில்லை. வழக்கு சொத்திற்கு வடக்கில் கோவில் நிலமும், தெற்கில் ரோடும், கிழக்கில் கோவிந்தன் வாத்தியார் மனையும், மேற்கில் பிரதிவாதி வீடும் உள்ளது. வழக்கு சொத்தின் விஸ்தீரனம் எவ்வளவு என கேட்டால் வடக்கு தெற்கு 32 கஜம், கிழக்கு மேற்கு 12 கஜம் ஆகும். வழக்கு சொத்தில் கூரை வீடு இருந்தது தற்போது அரசின் திட்டத்தில் தொகுப்பு வீடு கட்டியுள்ளேன். வழக்கு சொத்தில் நான் மட்டும்தான் அனுபவிக்கிறேன். வழக்கு போட்டபோதும் நான் மட்டும்தான் இருந்தேன். எனது வீட்டிற்கு மேற்கில் ஏற்கனவே முருக கவுண்டர் வீடு இருந்தது என்பது சரிதான். முருக கவுண்டர் வீட்டிற்கு பின்புறம் வடக்கு திசையில் வேளியப்ப கவுண்டர் வீடு இருந்தது என்பது சரிதான். அவர்கள் இருவரும் சகோதரர்கள் என்பதும் பாக பிரிவினை செய்து கொண்டு அனுபவித்தனர் என்பதும் சரிதான். அவர்கள் இருவரும் தெற்கிலுள்ள ரோடுக்கு செல்ல தங்கள் வீடுகள் அருகில் சந்து விட்டிருந்தனர் என்பது சரிதான். அவர்கள் இருவரும் இறந்த பிறகு அவர்களது வாரிசுகளிடமிருந்து அவர்களது சொத்துகளை பிரதிவாதி கிரயம் பெற்றார் என்பது சரிதான். ஏற்கனவே முருக கவுண்டர் வீட்டிற்கு மேல்புறம் ஆதிகேசவ நாயுடு வீடு இருந்தது என்பது சரிதான் அதையும் பிரதிவாதி கிரயம் பெற்றுவிட்டார் என்பது சரிதான். மேற்படி மூன்று இடங்களையும் கிரயம் பெற்ற பிரதிவாதி அவற்றில் வீடு கட்டியுள்ளார் என்பது சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்கு பின்புறமுள்ள தோட்டதிற்கு அவர் முருக கவுண்டர் மற்றும் வேளியப்ப கவுண்டர் வாரிசுகளிடம் கிரயம் பெற்ற இடம் வழியாகதான் சென்று வருகிறார் என்பது சரிதான். சாட்சி தற்போது கோவில் இடத்திற்கு செல்ல 10 அடி பொது வழி இருந்ததாகவும் அதில்தான் பிரதிவாதி சென்று வருவதாகவும் கூறுகிறார். முருக

கவுண்டர் மற்றும் வேளியப்ப கவுண்டர் விட்டிருந்த சந்து தற்போது இல்லை அதனையும் சேர்த்து பிரதிவாதி வீடு கட்டிவிட்டார். பிரதிவாதியின் வீடு ஏற்கனவே இருந்த சந்தை விட்டுதான் கட்டப்பட்டது என்றால் அது சரியல்ல. வழக்கு போடும் முன்னர் வழக்கு சொத்தை நில அளவையர் மூலம் அளந்து பார்த்தேன் அப்போது 3-1/2 அடி பிரதிவாதி ஆக்கிரமித்துள்ளதாக சொன்னார்கள். அவ்வாறு அளவை செய்ததை காட்டும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என கேட்டால் அவ்வாறு ஆவணம் எதனையும் வாங்கி வைக்கவில்லை. நான் சொல்வதுபோல நில அளவை ஏதும் செய்யவில்லை என்பது சரியல்ல. பிரதிவாதி வீடு கட்டும்போது 3 அடி விட்டுதான் கட்டினார் என்றால் அது சரியல்ல. அவர் கடக்கால் போடும்போதே தடுத்தோம். பிரதிவாதி வீடு கட்டும்போதே காவல் நிலைய புகார் கொடுத்தேனா என கேட்டால் ஊரில் தலைவர் மூலம் பஞ்சாயத்து செய்தோம். பிரதிவாதி எப்போது வீடு கட்டினார் என்பது ஞாபகமில்லை. பிரதிவாதி வீடு கட்டி எத்தனை வருடம் கழித்து வழக்கு போட்டேன் என கேட்டால் ஒரு பத்து வருடம் கழித்து வழக்கு போட்டேன். நீதிமன்ற ஆணையர் அளவை செய்த போது பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்ததால் இரண்டாம் முறை அளவை மேற்கொள்ளப்பட்டது என்பது சரிதான். பின்னர் வருவாய்த் துறை ஆவணங்கள் படி பிரதிவாதி அவரது இடத்தில்தான் வீடு கட்டியுள்ளதாக அளவையில் தெரியவந்தது என்றால் இல்லை 3-1/2 அடி ஆக்கிரமித்து பிரதிவாதி கட்டியுள்ளதாக சொன்னார்கள். வழக்கு சொத்திற்கு என் பெயரில் பட்டா வாங்கியுள்ளேனா என கேட்டால் ஆமாம் இருக்கிறது. அந்த பட்டாவை தாக்கல் செய்தேனா என கேட்டால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததற்கு அவருக்கு அறிவிப்பு கொடுத்தேனா என கேட்டால் என் வழக்கறிஞரிடம் சொன்னேன். நானும் என் சகோதரர்களும் எனது சாட்சிய வாக்குமூலத்தில் கண்டபடி பாகம் ஏதும் பிரித்துக் கொள்ளவில்லை. பிரதிவாதியின் இடத்தை அபகரிக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்பது சரியல்ல. பிரதிவாதி எனது இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யவில்லை என்பது சரியல்ல.